நாள் -21.05.2024

**STC. No.**543/2023

**ம.சா.1- செந்தில்குமார், த/பெ. ஆறுமுகம்.**

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act**, 1969 (**Central Act** 44 **of** 1969) **on the** 21st **day of May** 2024.

சாட்சி மனுவின் பேரில் அழைக்கப்பட்டு, மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் இன்று குறுக்கு விசாரணைக்கு அனுமதி வழங்கப்பட்டது.

**குறுக்கு விசாரணை**

1. எஸ்.ஆர்.ஏ நிறுவனம் எங்களுடைய குடும்ப நிறுவனம் என்றால் சரிதான். அந்நிறுவனத்தில் நான் எந்த வருடத்தில் பங்குதாரராக சேர்ந்தேன் என்று எந்த வருடத்தில் விலகினேன் என்று நிரூபிப்பதற்கும் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் தாக்கல் செய்யவில்லை. 2002 வரை அந்நிறுவனத்தில் பங்குதாரராக இருந்தேன். தற்பொழுது நிறுவனத்தினை நிர்வகித்து மட்டும் வருகிறேன். நான் வருமானவரி செலுத்தி வருகிறேன் என்றால் நான் தனியாக தாக்கல் செய்து வருகிறேன்.

2. வருமானவரி கணக்கினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய இயலும். என்னுடைய 2 வது மகளின் திருமணம் 26.01.2023 ம் தேதியன்று நடைபெற்றது. மேற்படி திருமணத்திற்குண்டான செலவு ரூ.1 கோடிக்கு மேல் வரும் என்றால் சரியல்ல. என்னுடைய மகளுக்கு நான் கார் வாங்கி கொடுக்கவில்லை. 2021 சட்ட மன்ற தேர்தலில் நான் சூலூரில் வேட்பாளராக நின்றேன் என்றால் சரிதான். தேர்தலுக்கான வரவு செலவு கணக்குகளை தேர்தல் ஆணைத்திடம் ஒப்படைத்தேன் என்றால் சரிதான். மேற்படி விபரங்களை இவ்வழக்கில் தாக்கல் செய்ய இயலும் என்றால் தேர்தல் ஆணையத்திடம் பெற்று தான் தாக்கல் செய்ய இயலும்.

3. 14.03.2021 ம் தேதியன்று நான் எதிரியிடம் ரூ.1 கோடியே 20 லட்சம் கடனாக பெற்று கொண்டு அதற்கு ரசீது மற்றும் கடனுறுதி சீட்டு எழுதி கொடுத்தேன் என்றால் சரியல்ல. மேற்படி கடனை வசூல் செய்வதற்காக எதிரி 11.04.2023 ம் தேதியன்று எனக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். அவ்வறிப்பிற்கு நான் பதில் அறிவிப்பு அனுப்பியுள்ளேன். மேற்படி பதில் அறிவிப்பின் நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய இயலுமா என்றால் எதிரியே தாக்கல் செய்யலாம்.

4. நான் எதிரி அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை வாங்க மறுத்து திருப்பி அனுப்பிவிட்டேன் என்றாலும் தற்பொழுது அவ்வறிப்பை பெற்று கொண்டதாகவும் அதற்கு பதில் அறிவிப்பு அனுப்பியதாகவும் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ரூ.1 கோடியே 20 லட்சத்தை திருப்பிபெறும் பொருட்டு எதிரி எனக்கு எதிராக உரிமையியல் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அது தற்பொழுது நிலுவையில் உள்ளது. (மனுதாரரின் வழக்கறிஞர் குறுக்கிட்டு சாட்சி பொய் வழக்கு என்று கூறியதாகவும் அதனையும் தட்டச்சு செய்யுமாறு கூறியதன் பேரில் சாட்சி பொய் வழக்கு என்று கூறுகிறார்).

5. என்னுடைய மனைவி மல்லிகாவும், என்னுடைய சகோதரன் கணேசன் ஆகியோர் எதிரியிடம் தலா ரூ.1 கோடி பெற்று கொண்டு ஆவணங்கள் எழுதி கொடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல, அவை போலீயான ஆவணங்கள் ஆகும். என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் பத்தி 4 ல் குறிப்பிடபட்டுள்ள பொன்னி டிரஸ்ட்டில் நான் செயலாளராக இருப்பதற்கும் மற்றும் லிட்ரசின் மிசின் பள்ளியில் தாளாளராக இருப்பதற்கும் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. தேவைபட்டால் அவ்வாவணத்தை தாக்கல் செய்ய தாயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன்.

6. எதிரி எங்கள் பள்ளியின் நிர்வாக மேலாளராக பணி நியமனம் செய்ததற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. மேற்படி டிரஸ்ட் மற்றும் பள்ளி குறித்து பல்வேறு வழக்குகள் அரங்காவலர்களுக்கு இடையே நிலுவையில் இருந்து வருகிறது என்றால் சரிதான். சில வழக்குகள் முடிவடைந்தும் உள்ளன. நான், என் மனைவி மற்றும் சகோதரர் வாங்கிய ரூ.3 கோடியே 20 லட்சத்தை திருப்பி கேட்டபொழுது நான் பொன்னி டிரஸ்டில் அரங்காவலர் பதவியிலிருந்து விலகி கொள்வதாகவும் அப்பதவியை எதிரிக்கு கொடுத்து மேற்படி கணக்கை நேர் செய்து விடுவதாகவும் பேசி முடித்தோம் என்றால் சரியல்ல.

7. என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணங்களில் உள்ள கையொப்பம் என்னுடையதா என்றால் அது எனக்கு தெரியாது. ஏனெனில் பள்ளியில் வைத்திருந்த பல்வேறு ஆவணங்கள் திருடு போனதால் அது குறித்து புகார் அளித்துள்ளேன். எதிரி என்னிடம் ஒரு கோடியே 20 லட்சம் கடனாக பெற்றபோது ரூ.10 லட்சம் அவர் வசம் இல்லை என்பதால் அதற்காக எதிரி காசோலையை வழங்கினார் என்றாலும் அதன்பிறகு அப்பத்து லட்சத்தை எதிரி என்னிடம் ரொக்கமாக கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல.

8. திருடுபோன ஆவணங்களை எதிரி தவறாக பயன்படுத்துகிறார். ஆவணங்கள் திருடுபோனது குறித்து காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளேனா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. புகார் அளித்திருக்கலாம். எதிரிக்கு எதிராக புகார் அளிக்கவில்லை என்றால் சரியல்ல, கொடுத்துள்ளேன். வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதா என்றால் மனு ஏர்பு ரசீது வழங்கப்பட்டுள்ளது. உண்மையில் ஆவணங்கள் திருடு போகாததால் வழக்குகளை சந்திப்பதற்காக பொய்யாக புகார் அளித்துள்ளேன் என்றாலும் உண்மையில் திருடுபோயிருந்தால் திருடுபோயிருந்தாக கூறப்படும் ஆவணங்களை மீட்டிருப்பேன் என்றால் சரியல்ல.

9. நானும் என்னுடைய சகோதரர்களும் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்திகொண்டு 19.07.2021ம் தேதியன்று எதிரியை பள்ளிக்கு அழைத்து சென்று அறிமுகப்படுத்தி வைத்தோம் என்றால் எதிரியை Administrative officer ஆக பணி நியமனம் செய்தோம். நான், என்னுடைய மனைவி, எதிரி எங்களுக்கு வழங்கிய பணத்தை திரும்ப பெற நடவடிக்கை எடுத்தபின்னர் அவர் அனுப்பிய 11.04.2023ம் தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பை நான் திருப்பி அனுப்பிவிட்டு 18.04.2023ம் தேதியன்று எதிரி இவ்வழக்கு காசோலையை எனக்கு வழங்கியதாக பொய்யாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

10. எதிரி எனக்கு எதிராக உரிமையியல் வழக்கு தாக்கல் செய்த பின்னர் எதிரி என்னை நம்பி திருப்பி பெறாமல் விட்ட காசோலையை பயன்படுத்தி இவ்வழக்கை பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 30.11.2023ம் தேதியன்று என் மனைவி எதிரிக்கு ரூ.5 லட்சத்திற்கு காசோலை வழங்கியுள்ளார் என்றால் சரியல்ல. அக்காசோலை 2013 வருடத்திற்குரியது காணாமல் போயிவிட்டதாக மங்கலம் காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டுள்ளது. புகாரினை 2013ம் வருடமே அக்காசோலை காணாமல் போய்விட்டது என்று புகார் அளித்துள்ளீர்களா என்றால் 10 வருடங்களாக வங்கி கணக்கு பராமரிக்கப்படாமல் உள்ள நிலையில் காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்யப்பட்டது தெரிந்த பின்னார் காசோலைக்கு ஸ்டாப் பேமண்ட் அறிவிப்பும் அது திருடுபோய்விட்டதாகவும் புகார் அளித்துள்ளோம். மனு ஏர்பு ரசீது வழங்கியுள்ளார்கள்.

11. நிர்வாகத்தில் இருப்பவர்களை ஆவணங்களை கையொப்பம் செய்து வெற்று ஆவணங்களாக வைத்திருக்க மாட்டார்கள் என்றாலும் வழக்கிற்காக கையொப்பம் செய்த வெற்று ஆவணங்களாக வைத்திருந்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கு நான் 10 லட்சம் கடன் கொடுத்ததற்ககோ அதை எதிரி பெற்று

கொண்டதற்கோ கடனை திருப்பி செலுத்தும் பொருட்டு எதிரி வழக்கு காசோலையை கொடுத்தார் என நிரூபிக்க எவ்வித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

12. சட்டப்படி எதிரி திருப்பி கொடுக்கவேண்டிய கடன் எதுவும் நிலுவையில் என்பதால் இவ்வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு முறையாக சார்வு செய்யாததால் எதிரி எனக்கு பதில் அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரியல்ல.

G RUBANA

Digitally signed by G RUBANA
Date: 2024.05.21 14:39:08 +0530

**Signature of Witness**

**நீதித்துறை நடுவர்**

**சூலூர்**